**04.09.2025**

**CC 416/2019**

**PW.1. Yuvarajkumar, S/o. Baskar Babu**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. நான் பல்ஜூ நாயுடு வகுப்பை சேர்ந்தவர். வழக்கு சம்பவத்தினால் நான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். கோவில் கட்டி பூஜை செய்து வருபவர் எனது அண்ணன் ஆவார். கோவில் கட்டுவதற்கு அரசாங்க அனுமதியும், ஊர் பஞ்சாயத்திலும் அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. (சாட்சி பின்னர் ஊர் பஞ்சாயத்தில் அனுமதி பெற்று கட்டியதாக சொன்னார்). கோவிலில் எனது அண்ணன் மட்டும் தான் பூஜை செய்வார் என்றாலும் கோவில் நிர்வாகம் அவருடைய பொறுப்பில் உள்ளது என்றாலும் சரிதான். எனது அண்ணன் பகலில் மட்டும் கோவிலில் பூஜை செய்வார். எனது புகாரில் விடியற்காலையிலும், இரவிலும் சங்கு ஊதுவதால் பிரச்சனை ஏற்படுவதாக சொல்லியுள்ளது பொய் என்றால் நான் புகாரில் அவ்வாறு சொல்லவில்லை. புகாரில் எனது அண்ணன் தினமும் விடியற்காலையில் பூஜை செய்து வருவதால் சதிஷ்குமார் என்பவர் எனது அண்ணனிடம் பிரச்சனை செய்து வருவதாக சொல்லி உள்ளேன் என்றால் புகாரில் அவ்வாறு சொல்லவில்லை.

2. நான் எனது முதல் விசாரணையில் சொல்லி உள்ள விவரங்களை போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். குறிப்பாக எனது தங்கையின் கணவர் சமூகத்தை பற்றி பேசியதாக எனது புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். எனது புகாரிலும், போலீசார் விசாரணையிலும் மேற்படி விவரத்தை சொல்லவில்லை என்றாலும், வழக்கிற்காக தற்பொழுது மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.போலீசார் என்னை சம்பவம் நடந்து 4 நாட்கள் கழித்து தான் விசாரணை செய்தார். மருத்துவமனையிலும் போலீசார் வந்து என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து 4 நாட்கள் கழித்து விசாரணை செய்ததை தவிர வேறு விசாரணை எதுவும் செய்யவில்லை. போலீசார் எனது வீட்டிடம் வந்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் என் மீது புகார் அளித்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் அளித்த புகாரில் போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள்.

3. கோவிலில் சங்கு ஊதுவது சம்பந்தமாக என்னிடமும், எனது அண்ணனிடமும் எதுவும் எதிரிகள் கேட்கவில்லை என்றால் சரிதான். கோவிலில் எனது அண்ணன் மந்திரம், மாந்திரகம் செய்வரா என்றால் இல்லை. எதிரிகள் நானும், எனது அண்ணனும் கோவிலில் அம்மாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் சங்கு ஊதி பிரச்சனை செய்வதாக சொல்கிறார்கள் என்றால் சரியல்ல. அப்பாவி மக்களை மந்திரம் என்ற பெயரில் ஏமாற்றுவதற்கு எதிரிகள் இடையூறாக இருப்பதால் அவர்கள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது வீட்டின் வழியாக சென்ற போது நான் தான் அவர்களை மடக்கி தாக்கினேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்த போது யார் என்னை அடித்தார்கள் என்ற

விவரத்தை சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லி உள்ளேன். விபத்து பதிவேட்டில் தெரிந்த மூன்று நபர்கள் அடித்துள்ளதாக சொல்லி உள்ளேன் என்றாலும் எதிரிகள் அடித்ததாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல.

4. எனது புகாரில் உள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொன்ன சங்கதிகள் இல்லை என்றால் சரிதான். புகாரில் நான் கையொப்பம் போடவில்லை. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும், எதிரிகள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.